**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.111/2020**

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : திரு.ராமலிங்கம் (அ.சா.3) | தொழில் | : | லையன் இன்ஸ்பெக்டர் தமிழ்நாடு மின்சாரவாரியம். |
| த/பெ., க/பெ. | : மாணிக்கம் | வயது | : | 48 |
| கிராமம் | : பழனி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : | 20.11.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

**முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் லையன் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 மனோகரன் என்பவரையும் தெரியும். அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையில் என்ன பிரச்சனை என்று தெரியாது. சம்பவம் நடந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. 2019 ம் வருடம் ஒருநாள் ஆஜர் எதிரி மின் கம்பம் தள்ளிப் போடுவதற்காக பணம் கட்டியுள்ளார். அதை தள்ளிப்போடுவதற்காக நானும் எங்கள் மின்சார வாரிய ஊழியர்களும் அங்கு சென்றோம். வேல்பாண்டி, மாயக்குமார், முருகேசன், சுரேஷ் ஆகியோர் என்னுடன் வந்திருந்தனர். அ.சா.1 மனோகரனும், ராஜா என்பவரும் மின் கம்பத்தை தள்ளிப்போடக் கூடாது என்றும், அது பொதுப்பாதை என்றும் சொன்னார்கள். நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். சம்பவம் நடந்தது பற்றி

**எங்களுக்கு நேரடியாக தெரியாது. இரண்டு நாட்கள் கழித்து சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**கடந்த 17.09.2019ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் சிவகிரிப்பட்டியைச் சேர்ந்த கருப்புச்சாமி என்பவர் கொடுத்த மனுவின்பேரில் மின் கம்பத்தை மாற்றச்சென்றபோது, அந்த இடத்தில் அ.சா.1 மனோகரன் என்பவருக்கும், எதிரிக்கும் இடையே தகராறு ஏற்பட்டு, அதில் எதிரி மனோகரனை அரிவாளால் தலை மற்றும் இடுப்பில் வெட்டிவிட்டார் என்றும், காயம்பட்ட மனோகரன் சத்தம் போடவே எதிரி அரிவாளை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்றும், பின்னர் நாங்கள் அங்கு வேலை செய்யாமல் போய்விட்டோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.11.20 17:56:40 +0530

**கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,**
**பழனி.**